ராமநாதபுரம் மண்டபத்தில்
‘ஆழ்கடல் மீன்பிடித் தொழில்நுட்பம்’ ஒரு வார காலம் பயிற்சி வகுப்பு: கலெக்டர் விஷ்ணு சந்திரன் துவக்கி வைத்தார்

ராமநாதபுரம், நவ.23– ஆழ்கடல் மீன்பிடித் தொழில்நுட்பம் பற்றிய ஒரு வார காலம் பயிற்சி வகுப்பை கலெக்டர் விஷ்ணு சந்திரன் துவக்கி வைத்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமான மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி இயக்குனரகம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் இணைந்து ஆழ்கடல் மீன்பிடித் தொழில்நுட்பம் பற்றிய ஒரு வார காலம் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் பயிற்சி வகுப்பை துவக்கி வைத்து பேசுகையில்

ஆழ்கடல் மீன்பிடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி என்பது மீனவர்களுக்கு மிக முக்கியமான ஒன்றாகும். இப்பயிற்சியினை மீன்வளத்

தொழில் காப்பகம் மற்றும் தொழில்சரர் பயிற்சி இயக்குனரகமும் இணைந்து இப்பகுதியில் உள்ள மீனவர்களுக்கு வழங்குகின்றன. இப்பகுதியில் ஆழ்கடல் மீன்பிடி தொழிலில் உள்ள தொழில்நுட்பத்தை நன்றாக அறிந்து கொண்டு பயிற்சியாளாகள் தெரிவிக்கும் பயிற்சி முறையை நன்றாக கற்று உணர்ந்து ஆழ்கடல் மீன் பிடிப்பில் ஈடுபட வேண்டும். ஆழ்கடல் மீன் பிடித்தல் என்பது மீனவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பயன் உள்ளதாக இருக்கும். இதற்காக ஆழ்கடல் மீன் பிடிப்பு குறித்து நன்றாக பயிற்சி பெற்றிட வேண்டும். ஆழ்கடல் மீன்பிடிப்பு தொழிலை அதிகப்படுத்தும் போது கடலோர அதிமீன்பிடிப்பை குறைத்திடலாம். அந்த அளவிற்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு மிக பயனுள்ளதாக இருந்திடும்.

மேலும் மீனவர்கள் படகு ஓட்டுநர் உரிமம் பெற்று பணியில் ஈடுபடுவது என்பது மிக முக்கியமான ஒன்றாகும். எனவே ஓட்டுநர் உரிமம் இல்லாத மீனவர்கள் தவறாமல் ஓட்டுநர் உரிமம் பெற்று பணியாற்ற வேண்டும். எனவே இப்பகுதியில் உள்ள மீனவர்கள் இதுபோன்ற பயிற்சிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் அதன் மூலம் பாதுகாப்பான ஆழ்கடல் மீன்பிடிப்பு தொழிலில் ஈடுபட்டு பயன்பெறலாம் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மீன்வளத் தொழில் காப்பக இயக்குநர் முனைவர். நீதிச்செல்வன், மீன்வள பல்கலைக்கழக உதவி பேராசிரியர் கலையரசன், திறன் மேம்பாட்டு கழக உதவி இயக்குநர் குமரவேல், அரசு தானியங்கி பொறியாளர் சிவசுடலைமணி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட கலந்து கொண்டனர்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் அழகர்கோவில் ராஜகோபுரம் குடமுழுக்கு விழா: ‘கோவிந்தா கோவிந்தா கோஷம் முழங்க தரிசனம்

அலங்காநல்லூர், நவ. 23– மதுரை அருகே மிகவும் பிரசித்தி பெற்ற 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றான அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோவிலில் ராஜகோபுரம் (பதினெட்டாம்படி கோபுரம்) குடமுழுக்கு விழா வெகு விமர்சையாக இன்று நடைபெற்றது. 120 அடி உயரம் கொண்ட அழகர்கோவில் ராஜகோபுரத்தில் 7 நிலைகளை கொண்ட அமைப்பு மற்றும் மேலே 6 1/2 அடி உயரத்தில் 7 கோபுர கலசங்கள் உள்ளன. இந்த ராஜகோபுரத்தில் 628 சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை ராமயாணம், மகாபாரதம் மற்றும் 4 யுகங்களில் பெருமாள் வாழ்ந்த வரலாறு உள்ளிட்டவை சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது தனிச் சிறப்பாகும். சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடந்த ஆண்டு 2022 மார்ச் 13ல் பாலாலய பூஜையுடன் தொடங்கி ராஜகோபுரத்தில் சிமெண்ட் கலவைகள் பயன்படுத்தாமல் பழமையான முறைப்படி சுண்ணாம்பு, கடுக்காய்,



கருப்பட்டி உள்ளிட்ட மூலப்பொருட்களை பயன்படுத்தி அழகுற பணிகள் நடைபெற்று முடிந்நிலையில் கடந்த நவ 3ம் தேதி குடமுழுக்கு விழாவிற்காக முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் நேற்று முன்தினம் 21ம் தேதி வாஸ்து சாந்தியுடன் யாகசாலை பூஜைகள் தொடங்கியது. தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த யாகசாலை பூஜையில் எஜமானர் அழைப்பு, அங்குரார்ப்பணம், கும்ப ஸ்தாபனம், புண்யாகவாசனம், மகா சாந்தி ஹோமம், பூர்ணாஹுதி உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து இன்று காலை 9.45 மணி அளவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் கோவிந்தா, கோவிந்தா கோஷங்கள் முழங்க ராஜ கோபுர கும்ப கலசங்களில் தங்க குடத்தில் கொண்டுவரப்பட்ட புனித நீர் ஊற்றப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றது. பின்னர் வானத்தில் விமானம் (ஹெலிகாப்டர்) மூலம் கோபுரத்திற்கு மலர்கள் தூவப்பட்டது. இந்த கும்பாபிஷேக விழாவில், அறங்காவல் குழுவினர், அறநிலையத்துறை அதிகாரிகள், நீதிபதிகள், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து இன்று மாலை சுந்தரராஜபெருமாள் கருட வாகன புறப்பாடும் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை தக்கார் வெங்கடாசலம், துணை ஆணையர் ராமசாமி மற்றும் கோவில் கண்காணிப்பாளர்கள், பணியாளர்கள் செய்திருந்தனர்.

புதுக்கோட்டையில்
நேசக்கரம் முதியோர் இல்லத்தின் செயல்பாடுகள்: கலெக்டர் மெர்சி ரம்யா நேரில் பார்வையிட்டு ஆய்வு

புதுக்கோட்டை, நவ.23– புதுக்கோட்டை நகராட்சி தொண்டைமான்நகர் பகுதியில் உள்ள நேசக்கரம் முதியோர் இல்லத்தின் செயல்பாடு களையும் மழைநீர் வெள்ளப் பாதிப்புகளை தவிர்க்கும் வகையில் காட்டுப்புதுக்குளம் வாய்க்காலில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மாவட்ட கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை நகராட்சி தொண்டைமான்நகர் பகுதியில் தேசிய நகர்ப்புர வாழ்வாதார திட்டத்தின்கீழ் நகர்புர வீடற்றோர்களுக்கான இல்லம் செயல்பட்டு வருகிறது. இந்த இல்லத்தினை நேசக்கரம் தொண்டுநிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இவ்வில்லத்தில் 35க்கும் மேற்பட்ட முதியோர்கள் வசித்து வருகின்றனர். அதன்படி, முதியோர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், உணவு, மருத்துவம் உள்ளிட்டவைகள் போதுமான



அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது குறித்து மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் முதியோர் இல்லத்தில் தங்க வைக்கப் பட்டுள்ள ஆண், பெண் எண்ணிக்கைகள் குறித்தும் அவர்களுக்கு புதுக்கோட்டை நகராட்சி சார்பில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் அவர்களுக்கு நாள்தோறும் வழங்கப்படும் உணவு வகைகள் குறித்தும் முதியோர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவது குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டு, மழைக் காலங்களில் மாவட்டத்தின் பிற பகுதிகளிலிருந்து இல்லத்திற்கு வருகைதரும் ஆதரவற்ற முதியோர்களும் தங்கும் வகையில் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் மழைக்காலங்களில் முதியோர்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து அவர்களை பாதுகாக்கும் வகையில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை நகராட்சி பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக மழைநீர் வெள்ள பாதிப்புகளை தவிர்க்கும் வகையில் காட்டுப்புதுக்குளம் வாய்க்காலில் சேர்ந்துள்ள ஆகாய தாமரைச் செடிகளை அகற்றுவதற்கும் நகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங்காத வகையிலும் மழைநீர் விரைந்து வடியும் வகையிலும் தூர்வாரி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, வட்டாட்சியர் கவியரசன், நகராட்சி அலுவலக மேலாளர் காளியம்மாள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

கோபால்பட்டி அருகே ஆன்லைனில் புது செல்போன் ஆர்டர் செய்தவருக்கு உடைந்து போன செல்போன்

நத்தம், நவ.23– கோபால்பட்டி அருகே ஆன்லைனில் புது செல்போன் ஆர்டர் செய்தவருக்கு வந்த உடைந்த செல்போனைக்கண்டு அவர் அதிர்ச்சி அடைந்தார்.

நத்தம் அருகே கோபால்பட்டி கன்னியாபுரத்தை சேர்ந்தவர் வீரக்குமார்(வயது 39). ஆட்டோ டிரைவர். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆன்லைன் மூலம் ரூ.1598 மதிப்புள்ள மொபைல் போன் ஒன்று ஆர்டர் செய்திருந்தார். இந்நிலையில் நேற்று மாலை அவருக்கு அந்த போன் டெலிவரி செய்யப்பட்டது. இதனை பணம் கொடுத்து பெற்றுக்கொண்ட வீரக்குமார் அதனைப் பிரித்து பார்த்த போது உள்ளே ரிப்பேரான உடைந்த பழைய பட்டன் மொபைல் இருந்தது. இதையடுத்து டெலிவரி செய்த நபரிடம் வீரக்குமார் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதற்கு அவர் நீங்கள் ரிட்டன் செய்யுங்கள், போன் மாறி வந்ததற்கு நான் பொறுப்பல்ல என கூறி விட்டு சென்று விட்டார். இதனையடுத்து வீரக்குமார் தான் ஆர்டர் செய்த நிறுவனத்திற்கு ரிட்டன் செய்ய முயற்சித்த போது ரிட்டன் செய்ய முடியவில்லை. இது அவருக்கு மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் அதிருப்திய அடைந்த அவர் இதுகுறித்து வழக்கறிஞரிடம் ஆலோசித்து புகார் கொடுக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

கனமழை காரணமாக ஓடைகளில் வெள்ளப்பெருக்கு: சதுரகிரி செல்வதற்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து

திருவில்லிபுத்தூர், நவ.23– கனமழை காரணமாக சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலுக்கு செல்லும் வழியில் உள்ள காட்டாறுகள் மற்றும் ஓடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், பவுர்ணமி வழிபாட்டிற்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது. திருவில்லிபுத்தூர் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலுக்கு கார்த்திகை மாத பிரதோஷம் மற்றும் பவுர்ணமி வழிபாட்டிற்காக நவம்பர் 24 முதல் 27ம் தேதி வரை பக்தர்கள் மலையேறிச் சென்று சுவாமி தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வத்திராயிருப்பு சுற்றுவட்டார பகுதிகளில் 119 மில்லி மீட்டர் அளவிற்கு கனமழை பெய்தது. இதனால் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயிலுக்கு செல்லும் மலைப்பாதையில் உள்ள மாங்கனி ஓடை, சங்கிலிப்பாறை, வழுக்குப்பாறை, மலட்டாறு ஆகியவற்றில் நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் பக்தர்களின் பாதுகாப்பு கருதி கார்த்திகை மாத பவுர்ணமி வழிபாட்டிற்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படுவதாக வனத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார்குடி மக்கள் நேர்காணல் முகாமில் 214 பேருக்கு ரூ.47 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவி: கலெக்டர் சாருஸ்ரீ வழங்கினார்

திருவாரூர், நவ. 23 திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டம் ஆதிச்சபுரம் ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் 214 பேருக்கு ரூ.47 இலட்சத்து 82 ஆயிரத்து 80 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கலெக்டர் தி.சாருஸ்ரீ வழங்கினார்.

முகாமிற்கு கலெக்டர் சாருஸ்ரீ தலைமை வகித்தார். திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாவட்ட ஊராட்சித் தலைவர் கோ.பாலசுப்ரமணியன் முன்னிலை வகித்தனர். முகாமில் ஆதிச்சபுரம், பனையூர்,நெம்மேலி ஆகிய கிராமங்களுக்கான மக்கள் நேர்காணல் முகாம் ஆதிச்சபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

முகாமில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்டக் கலெக்டர் பேசியதாவது.

மக்கள் நேர்காணல் முகாமில் துறை அலுவலர்கள் தங்கள் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நல திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்கள். இந்த திட்டங்கள் குறித்த செய்தியை உங்கள் ஊரில் உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லும் போது திட்டங்கள் அனைவரிடமும் சென்று சேர்கிறது. இதற்காகத்தான் இந்த நேர்காணல் முகாம் நடத்தப்படுகிறது. இந்த முகாமில் 88 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு விரைவில் வீட்டுமனை பட்டா வழங்க நடவடிக்கை

மேற்கொள்ளப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை இரண்டாம் கட்டமாக கடந்த 10 ஆம் தேதி 10 ஆயிரம் பெண்களுக்கு வழங்கப்பட்டது. நிராகரிக்கப்பட்ட மனுக்களின் மீது மேல் முறையீடு செய்துள்ளீர்கள். மேல்முறையீடு செய்யப்பட்ட 19 ஆயிரம் மனுக்கள் மீது அடுத்த மாதத்திற்குள் ஏற்கப்பட்டதா, நிராகரிக்கப்பட்டதா என குறுஞ்செய்தி அனுப்பப்படும். ஏற்கப்பட்டவர்களுக்கு அவர்களின் வங்கி கணக்கில் மாதம் ரூ.1000 வரவு வைக்கப்படும்.

ஆதிச்சபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு ஆய்வகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பணி விரைவில் தொடங்கப்படும். இப்பகுதியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. இதில் 6 மாதம் முதல், 2 வருடம் வரை படிக்கக் கூடிய பாடப்பிரிவுகள் உள்ளது. இதில் படிப்பவர்களுக்கு அவர்களே வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கிறார்கள். நமது வீட்டில் அருகில் உள்ள இந்த தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர்த்து படிக்க வைக்க வேண்டும். தற்சமயம் டாடா டெக்னாலஜி மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் இணைந்து புதிய மென்பொருள் பாடப்பிரிவினை ஆரம்பித்துள்ளார்கள். இந்த படிப்பு ஒவ்வொரு நிறுவனத்தில் தேவைப்படக்கூடிய படிப்பு ஆகும். இந்த பாடப்பரிவு சுயதொழில் செய்வதற்கும் கம்பெனியில் வேலை பார்ப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். அனைவரும் இதை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கிறேன் என தெரிவித்தார். மேலும் இன்றைய தினம், நடைபெறும் மக்கள் நேர்காணல் முகாமில் வருவாய்த் துறையின் சார்பில் 75 பேருக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித் தொகைக்கான ஆணையினையும் 33 பேருக்கு உறுப்பினர் சார்ந்தோர் திருமண உதவித் தொகைக்கான ஆணையினையும் 88 பேருக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கான ஆணையினையும் 2 பேருக்கு பட்டா மாறுதலுக்கான ஆணையினையும் வேளாண்மைத்துறையின் சார்பில் 10 பேருக்கு விதைகள் மற்றும் ஸ்பேயர்களையும்

1 பேருக்கு ரூ.12.19 இலட்சம் மதிப்பிலான நெல் நடவு இயந்திரமும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் 5 பேருக்கு மரக்கன்றுகளும் கலெக்டர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் கீர்த்தனாமணி, கோட்டூர் ஒன்றியக் குழுத்தலைவர் மணிமேகலை முருகேசன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மஞ்சுளா இளாரா, கலைவாணிமோகன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) லதா, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் அமுதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஏழுமலை, மன்னார்குடி வட்டாட்சியர் கார்த்தி, ஆதிச்சபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் அமுதா முருகையன், நெம்மேலி ஊராட்சி மன்றத் தலைவர் நேதாஜி, பனையூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஜீவானந்தம், கோட்டூர் தேனாம்பிகா திருக்கோயில் அறங்காவல் குழுத்தலைவர் பாலஞானவேல் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

பழனியில் நகராட்சி சார்பில் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்

பழனி நவ. 23 – பழனி நகராட்சி ஆணையர் பாலமுருகன் உத்தரவின் பேரில் சுகாதார அலுவலர் செந்தில் ராம்குமார் தலைமையில் நகராட்சி பணியாளர்கள் பஸ் நிலைய பகுதிகளில் சோதனை செய்தனர். அப்பொழுது கடைகளில் விற்பனைக்கு வைத்திருந்த பிளாஸ்டிக் டம்ளர்கள், பாலித்தீன் பைகள், என 40 கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இதையொட்டி கடை உரிமையாளர்களுக்கு 5 ஆயிரம் அபதாரம் விதிக்கப்பட்டது.

கொலை முயற்சி வழக்கில் டிரைவருக்கு 5 ஆண்டுகள் சிறை

திருவில்லிபுத்தூர், நவ.23– கொலை முயற்சி வழக்கில் டிரைவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டது.

ராஜபாளையம் அருகே செட்டியார்பட்டி பொன்னுசாமி தேவர் தெருவை சேர்ந்த மாரிச்சாமி (எ) மாரியப்பன்(42). இவர் டிரைவர் வேலை பார்த்து வருகிறார். இவரது அண்ணன் சுப்பையா பாண்டியன் கடந்த 2014ம் ஆண்டு செட்டியார்பட்டி குமந்தாபுரம் பகுதியை சேர்ந்த கட்டிட தொழிலாளி இருளாண்டி(40) என்பருக்கு ரூ.1.20 லட்சத்தை கடனாக கொடுத்துள்ளார். அதன்பின் 2016ம் ஆண்டு சுப்பையா பாண்டியன் உயிரிழந்து விட்டார். மாரியப்பன் பணத்தை திருப்பி கேட்டபோது, இருளாண்டி மறுத்ததால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு உள்ளது. இந்நிலையில் கடந்த 2019ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் தேதி கொடுக்கல் வாங்கல் பிரச்சினையில் மாரியப்பன், இருளாண்டியை அரிவாளால் வெட்டினார். இதில் காயமடைந்த இருளாண்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். தளவாய்புரம் போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து, மாரியப்பனை கைது செய்தனர். வழக்கு விசாரணை திருவில்லிபுத்தூரில் உள்ள தலைமை குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதில் மாரியப்பனுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.6 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி எம்.ப்ரீத்தா நேற்று தீர்ப்பளித்தார். அரசு தரப்பில் வழக்கறிஞர் அழகர் ஆஜரானார்

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.
பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 07.12.2023 அன்று மதியம் 12:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடனதாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
இந்தூர்	101042515835	பிரேம்குமார் A	தந்தை பெயர் அழகுராஜா	கதவு எண். 5 2 21ஏ, தேனி தாலுக்கா, கிழக்கு தெரு, வீரபாண்டி (டிபி), தேனி, முத்துதேவன்பட்டி, தமிழ்நாடு 625534	19-05-2023	42479.27
இந்தூர்	101042516409	பிரேம்குமார் A	தந்தை பெயர் அழகுராஜா	கதவு எண். 5 2 21ஏ, தேனி தாலுக்கா, கிழக்கு தெரு, வீரபாண்டி (டிபி), தேனி, முத்துதேவன்பட்டி, தமிழ்நாடு 625534	14-06-2023	194283.34
இந்தூர்	101042517466	பிரேம்குமார் A	தந்தை பெயர் அழகுராஜா	கதவு எண். 5 2 21ஏ, தேனி தாலுக்கா, கிழக்கு தெரு, வீரபாண்டி (டிபி), தேனி, முத்துதேவன்பட்டி, தமிழ்நாடு 625534	23-08-2023	35938.81
இந்தூர்	101042517370	பிரேம்குமார் A	தந்தை பெயர் அழகுராஜா	கதவு எண். 5 2 21ஏ, தேனி தாலுக்கா, கிழக்கு தெரு, வீரபாண்டி (டிபி), தேனி, முத்துதேவன்பட்டி, தமிழ்நாடு 625534	16-08-2023	46930.23

ஏல தேதி 07.12.2023 அன்று மதியம் 12.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

குறிப்பு: 28/11/23 அன்று திட்டமிடப்பட்ட ஏலம் 07/12/23 அன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளதால், 21/11/23 அன்று வெளியிடப்பட்ட முந்தைய வெளியீடு செல்லாது. ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகிறோம்.

படிவம் எண் NCLT 3A
மனுவை விவரிக்கும் விளம்பரம்
(தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், 2016–ன் விதி 35–ஐ பார்க்க)
டிரெட்ஜிங் இன்டர்நேஷனல் இந்தியா பிரைவேட் லிமிடெட்டை
இன்டர்நேஷனல் சீபோர்ட் டிரெட்ஜிங் பிரைவேட் லிமிடெட் உடன்
ஒருங்கிணைக்கும் திட்டம் குறித்த விஷயத்தில்
நிறுவன மனு எண்.CP(CAA)/52(CHE)2023 In CA(CAA)/31(CHE)/2023

டிரெட்ஜிங் இன்டர்நேஷனல் இந்தியா பிரைவேட் லிமிடெட்
(CIN: U45309TN1996PTC151855)
நிறுவனங்கள் சட்டம், 1956–ன் கீழ் நிறுவனம் துவக்கப்பட்டது
பதிவு அலுவலகம்: பி.எண். 2C, முதல் தளம், ஓஷன் ஸ்கொயர், சவுத் பேஸ்,
திரு வி கா தொழிற்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், கிண்டி, சென்னை, தமிழ்நாடு 600032
அதன் பிரதிநிதி திரு. ஆதித்ய சின்ஹா
இயக்குனர்/அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்
....மனுதாரர் நிறுவன எண்.1/மாற்றப்படும் நிறுவனம்

இன்டர்நேஷனல் சீபோர்ட் டிரெட்ஜிங் பிரைவேட் லிமிடெட்
(CIN: U45205TN2004PTC069094)
நிறுவனங்கள் சட்டம், 1956–ன் கீழ் நிறுவனம் துவக்கப்பட்டது
பதிவு அலுவலகம்: பி.எண். 2C, முதல் தளம், ஓஷன் ஸ்கொயர், சவுத் பேஸ்,
திரு வி கா தொழிற்பேட்டை, ஈக்காட்டுதாங்கல், கிண்டி, சென்னை, தமிழ்நாடு 600032
அதன் பிரதிநிதி திரு. பிராம் வந்தேபிட்டே, அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்
....மனுதாரர் நிறுவன எண்.2/மாற்றிக்கொள்ளும் நிறுவனம்
(ஒன்றாக சேர்த்து ‘மனுதாரர் நிறுவனங்கள்’ என்று குறிப்பிடப்படும்)

மனு பற்றிய அறிவிப்பு

இதன் வாயிலாக அறிவிக்கப்படுவது யாதெனில் நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவுகள் 230 முதல் 232களின் கீழ் **டிரெட்ஜிங் இன்டர்நேஷனல் இந்தியா பிரைவேட் லிமிடெட்டை** (மாற்றப்படும் நிறுவனம்) **இன்டர்நேஷனல் சீபோர்ட் டிரெட்ஜிங் பிரைவேட் லிமிடெட்** உடன் (மாற்றிக்கொள்ளும் நிறுவனம்) முறையே அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுடன் ஒருங்கிணைக்கும் திட்டம் குறித்து 18 அக்டோபர், 2023 அன்று இந்நிறுவனங்கள் கூட்டாக மனு ஒன்றை தாக்கல் செய்தன. அந்த மனு மாண்புமிகு தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு – I–ல் **புதன்கிழமை, 03 ஜனவரி, 2024** அன்று விசாரணைக்கு வருகிறது. மேற்கண்ட மனு குறித்து யாரேனும் ஆதரிப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாக இருப்பின் அது குறித்து அவர்கள் மனுதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அதற்கான காரணத்தை அவரோ அல்லது அவரது வழக்கறிஞரோ/பிரதிநிதியோ கையொப்பமிட்டு அவரது பெயர் மற்றும் முகவரியுடன் மனு விசாரணைத் தேதிக்கு இரண்டு நாட்கள் முன்னதாக மனுதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். இந்த மனு குறித்து எதிர்ப்பதாக இருப்பின், எதிர்ப்பதற்கான காரணம் அல்லது பிரமாணப் பத்திர நகலையும் இணைத்து அது போன்ற அறிவிப்பை அனுப்ப வேண்டும். யாருக்காவது மனு நகல் தேவைப்படின் அவர்கள் அதற்கான பரிந்துரைக்கப்பட்ட தொகையை செலுத்தி கீழ்க்கையொப்பமிட்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்/–
R. இன்பராஜ், வழக்கறிஞர்
மனுதாரர் நிறுவனங்களின் ஆலோசகர்
தேதி : 23.11.2023 எண்.10/28, 2வது தளம், 3வது குறுக்கு தெரு, ஆர்.கே. நகர்,
இடம் : சென்னை ஆர்.ஏ. புரம், மந்தைவெளி, சென்னை – 600 028.

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சின்னக்கண்ணுபுரம் வி.எம்.எஸ்.நகர் மற்றும் செல்வநாயகபுரம் பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்கும் பகுதிகளை மேயர் ஜெகன் பெரியசாமி பார்வையிட்டார். ஆய்வின் போது மாமன்ற உறுப்பினர் கீதா முருகேசன் மற்றும் து